www.padippakam.com



# ஈழத்தவர் வரலாறு 13


## கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621ஆம் ஆண்டு வரை....

### சோழராட்சி

உருகுணை தவிர்ந்த பிறபாகங்கள் சோழராட்சிக்குட்பட்டன என்று சூளவம்சம் கூறுமிடத்து யாழ்ப்பாணப் பகுதியும் பொலநறுவையிலிருந்து ஆட்சி நடத்திய சோழருடைய ஆதிக்கத்திற்குள் அடங்கியிருந்தது என்பது மறைமுகமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பதினோராம் நூற்றாண்டில் சோழ ஆட்சியின்போது பொறிக்கப்பட்ட சில கல்வெட்டுக்கள் யாழ்ப்பாணத்தில் கிடைத்துள்ளன. முதலாவது சாசனம் முதலாம் ராஜேந்திரசோழன் காலத்தது. இது யாழ்ப்பாணக் கோட்டைக்குள்ளே கண்டு பிடிக்கப்பட்டது. வேறு இரு சோழராட்சிக் காலத்து சாதனங்கள் ஊர்காவற்றுறைக் கோட்டைக்குள்ளே கண்டு பிடிக்கப்பட்டன. இவை அனைத்தும் பதினோராம் நூற்றாண்டின் முற்பகுதியில் சோழராட்சி உத்திரதேசத்தில் நிலவியதை உறுதிப்படுத்துகின்றன.

உத்தரதேசத்தை சோழரால் நியமிக்கப்பட்ட அரசுப் பிரதிநிதிகள் பலர் நிர்வகித்து வந்தார்கள் என நம்ப இடமுண்டு கி.பி. 948 ஆம் ஆண்டளவில் புகனேகவாகு அல்லது புவனேசவாசர் என்பவர், சிங்கை நகர்ப் பகுதிக்குரிய அரசப் பிரதிநிதியாக இருந்திருக்கவேண்டும். (புவனேகவாகு தமிழ்ப்பெயர், வீரவாகு போல) இவன் சோழபராந்தகனின் பிரதிநிதியாக இங்கு நியமனம் பெற்றிருக்கவேண்டும். ஏனெனில் கி.பி. 945 காலகட்டத்தில் சோழப்பராந்தகன் படையெடுத்து இலங்கைக்குவந்து சிங்களவரசனான் 4 ஆம் உதயனைப் புறங்கண்டான் என்றும் சிங்கை நகர் அரசனைக் கொன்றான் என்றும் வரலாற்றுக் குறிப்புள்ளது. இச்சோழ மன்னனின் பிரதிநிதியாகப் புவனேகவாகு சிங்கை நகரில் ஆட்சிப் பொறுப்பில் இருந்துள்ளான்.

பத்தாம் நூறநற்நாண்டிலே பார்சியாவின் அரசனான டோபாக் என்பவன், கர்ஷாஸ்ப் என்பவனின் தலைமையில் அனுப்பிய படை ஒன்று கலா என்ற துறையில் (கலா என்பது ஊர்காவற்றுறை - களபூமி) இறங்கி இரு நாட் பயணதூரமுள்ள ஓரிடத்தில் வாகு வென்னும் அரசனை வெற்றி கொண்டது என்று அசேதி என்ற பார்சியன் கர்ஷாஸ்ப் நமா என்னும் கிரந்தத்தில் எழுதியுள்ளான். பத்தாம் நூற்றாண்டில் வாகு என்னும் பெயருடன் இலங்கை அரசில் யாழ்ப்பாண மொழிந்த பிறவிடத்தில் எவருமிருந்திலர். வாகு என்று பார்சிய நூல் குறிப்பிடும் மன்னன் அல்லது சிற்றரசன் இந்தப் புவனேகவாகுவாக இருக்கலாம்.




கி.பி.10 ஆம் நூற்றாண்டளவில் பூநகரிப் பிரதேசம் சோழரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது என்பதற்கு ஆதாரங்களுள்ளன. அவ்வேளையில் அப்பிரதேசத்தின் சோழப்பிரதிநிதியாக இருந்த புவனேகபாகு பூநகரியில் இன்று விளங்குகின்ற நல்லூர் என்ற பகுததியில் தனது மாளிகையை அமைத்திருக்கவேண்டும். உண்மையில் இன்று கிடைக்கின்ற ஆதாரங்களிலிருந்து பூநகரியில் இன்று இருக்கின்ற நல்லூர் என்ற பிரதேசமே தமிழர் அரசின் புராதன நல்லூர் ஆகும் எனக் கொள்வதில் தவறு இல்லை. தென்னிந்தியாவில் பல ஊர்களுக்கு நல்லூர் எனப் பெயருள்ளது. ஆகவே, அத்தகைய ஒரு பெயர் பூநகரியிலுள்ள இந்தப் பிரதேசத்திற்கும் சோழரால் இடப்பட்டிருந்தது எனக் கொள்ளலாம். முதலாம் பராந்தகன் ஆட்சியில் தான் தமிழ்நாட்டிலுள்ள சோழமண்டலமும் மண்ணியாறும் இதன் தென் எல்லையிலுள்ள நல்லூரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாக கூறப்பட்டுள்ளன. குஞ்சரமல்லன் என்ற பராந்தகனின் சிறப்புப் பெயர் மண்ணியாற்றின் மறுபெயராக அழைக்கப்பட்டது. பூநகரியில் இராசதானிக்குரிய கட்டிட அழிபாடுகளின் தென்னெல்லையில் சோழ மண்டலமும் வடவெல்லையில் மண்ணியாறும் அதற்குச் சற்று வடக்காக நல்லூர் என்ற இடமும் காணப்படுகின்றது.

பதினோராம் நூற்றாண்டில் இலங்கையிலிருந்து சோழரைத் துரத்தி விட்டு இலங்கை முழுவதற்கும் முதலாம் விஜயபாகு (1055-1110( அரசனானான். அவன் ஆட்சிக்காலத்தில் வடவிலங்கை அவனாட்சியின் கீழ்ப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்த புராதன பௌத்த விகாரைகளுள் ஒன்றாகிய ஜம்புக்கோள விகாரையை புதுக்க அமைப்பித்தான் என சூளவம்சம் கூறுவதிலிருந்து இது உறுதிப்படுகின்றது.

விஜயபாகு இறந்த பின் கி.பி. 1110 ஆம் ஆண்டளவில் குலோத்துங்க சோழன், சோழராட்சியை மீண்டும்

**-செங்கை ஆழியான்-**

நிலை நாட்ட இலங்கை மீது படையெடுத்தான். அப்படைக்குத் தலைமை தாங்கி வந்தவன் கருணாகரத் தொண்டமான் என்னும் தளபதியாவான். அவன் யாழ்ப்பாணத்தைச் சிலகாலம் நிர்வகித்தான் என நம்ப இடமுள்ளது. தொண்டமானாற்றைத் துறைமுகமாக்குவித்தான். தொண்டமானாற்றில் விளைந்த தன்படுவான் உப்பை (தானாக விளையும் உப்பு) சோழ நாட்டிற்கு ஏற்றுவித்தான். உரும்பிராயிலுள்ள கருணாகரப் பிள்ளையார் கோவிலை இவனே அமைப்பித்தான்.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் உத்திரதேச அரசு தென்னிலங்கை ஆட்சியாளரின் ஆதிக்கத்தினுள் மீண்டும் உட்பட்டது. அவ்வேளை முதலாம் பராக்கிரமபாகு (கி.பி. 1153 - 1286) இலங்கையின் மன்னனாக இருந்தான். இதற்கு ஆதாரமாக நயினாதீவில் அகப்பட்ட கல்வெட்டொன்றும் ஆதாரமாகவுள்ளன. முன்னதில் ஊர்காவற்றுறையிலே நடைபெற்ற கடல் வாணிபம் பராக்கிரமபாகுவின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது என்பதையும் பின்னதில் ஊறாத்துறை, மட்டிவால், வல்லிக்காமம் ஆகிய இடங்களிலே பராக்கிரமபாகுவின் கடற்படை நிறுத்தப்பட்டிருந்தது என்பதையும் அறிய முடிகின்றது. பதின்மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை சிங்கை நகர் வடவிலங்கையின் தலைநகராகவும் இந்த அரசு சோழரின் ஆதிக்கதினுள்ளும் இருந்தது.

### யாழ்ப்பாண இராச்சியம்: ஆரியச்சக்கரவர்த்திகள்

யாழ்ப்பாண இராச்சியத்தின் தொடர் வரலாற்றில் பதின்மூன்றாம் நூற்றாண்டு மிக முக்கியமான காலகட்டமாகும். சுதந்திரத் தமிழ் இராச்சியம் நிறுவப்பட்டு நிலை கொண்ட காலமிதுவென வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவர். ஆரியச்சக்கரவர்த்தி எனச் சிறப்புப் பெயரோடு விதந்தோதப்படும் தமிழ் மன்னர்களின் ஆட்சிக் கால ஆரம்பமாக பதின்மூன்றாம் நூற்றாண்டு விளங்குகின்றது. அவர்கள் இராமேஸ்வரத்துப் பிராணமவரச குடியிற் சம்பந்தஞ் செய்த பின், உபநீதம் அணிந்து, ஆரிய அரசர் என்ற நாமம் புனைந்து இராமேஸ்வரத்தை தந்தேயத்தினாளுகைக்குட்படுத்தி அதனால் 'சேதுகாவலன்' என்ற புதுப்பெயர் புனைந்து விடைக்கொடியும் சேதுலாஞ்சனையும் பொறித்து, ஒருவர் பின் ஒருவராகப் பரராசசேகரன், செகராசசேகரன் எனச் சிங்காசனப் பெயர்கள் பூண்டு உலகம் போற்ற அரசு செலுத்தி வந்தார்கள்.

(தொடரும்)

டென்மார்க்கில் றேடியோ ஆசியாவின்
தமிழ் ஒளி - தமிழ் ஒலி
தொலைக்காட்சியைப் பார்ப்பதற்கும், வானொலியைக் கேட்பதற்குமான தொடர்புகளுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.
A. GANESH
By Pakeren 59, 2 TV, 5700 SVENDBORG, DENMARK
Tel & Fax: 62 22 43 99 Mobil: 40 59 42 98

சுந்தரம்ஸ் உணவுச் சேவை
பிரியாணி, சோறு மற்றும் இடியப்பம், இடியப்பக் கொத்து
சைவ - அசைவ வகைகளில் பெற்றுக்கொள்ளலாம்!
அறுசுவை உணவை தாயகத்தின் சுவையுடன் படைத்திடுவோம்
திருமண, பிறந்ததின, பூப்புனித நீராட்டுவிழா மற்றும்
அந்தியேட்டி, திவஷம், வீட்டில் நடக்கும் சிறு வைபவம்
எதுவானாலும் கூறுங்கள் - வகை செய்வோம்!!
தொடர்புகளுக்கு: 01 42 40 17 48 / 06 08 25 26 16